# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2468/08 - 2025 දෙසැම්බර් මස 23 වැනි අඟහරුවාදා - 2025.12.23

2468/08 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 101137 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான எஸ்எல்ரி கம்பஸ் (பிறைவேட்) லிமிடெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2024, பெப்புருவரி 29 ஆந் திகதிய 2373/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் “இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல்கள் பொறியியலில் விஞ்ஞான முதுமாணி” எனும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. எஸ்எல்ரி கம்பஸ் (பிறைவேட்) லிமிடெட் ஆனது, குறைந்த பட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் வணிக பகுப்பாய்வில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (இலங்கைத் தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் ;-

   (i) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தரத்தில்) பௌதிக விஞ்ஞான பாடத்துறையில் மூன்று பாடங்களில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (03) சாதாரண சித்தி (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்; அல்லது

   (ii) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தரத்தில்) பௌதிக விஞ்ஞான அல்லது உயிரியல் விஞ்ஞான பாடத்துறையில் இரண்டு பாடங்களிலும் மூன்றாம் பாடமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தில் சாதாரண சித்தியொன்றுமாக (S) மூன்று (03) சாதாரண சித்தி (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் ; அத்துடன்

   இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சாதாரண தரத்தில்) கணிதப் பாடத்தில் திறமைச் சித்தியொன்று (C).

2. எஸ்எல்ரி கம்பஸ் (பிறைவேட்) லிமிடெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| வணிக பகுப்பாய்வில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ சிறப்பு (வணிக பகுப்பாய்வு) |

கலாநிதி **ஹரிணி அமரசூரிய,**
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2025, திசெம்பர் 17.

EOG 12 - 0209

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது